| தரம் 10 | வலயக்கல்விக் காரியாலயம் – கட்டுகஸ்தோட்டை<br>முதலாந்தவணைப் பரீட்சை – 2020<br>வரலாறு – I | புள்ளிகள் |
|---|---|---|

சுட்டெண் : நேரம் - 3 மணித்தியாலயங்கள்

**1-20** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **(1), (2), (3), (4),** என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து வழங்கப்பட்ட விடைத்தாளில் உரிய இலக்கத்திற்கு புள்ளடி **(X)** இடுக.

## பகுதி - I

01. இலங்கையின் மிகப் பழமையான வரலாற்று நூல் எது?

(1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) தாடவம்சம் (4) போதிவம்சம்

02. பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம்

(1) தம்பமஸ்ஸ (2) கஹபன (3) புராண (4) தரண

03. பனாகடுவ செப்பு சாசனம் எந்த மன்னன் பற்றி குறிப்பிடுகின்றது.

(1) 1ம் பராக்கிரமபாகு (2) துட்டகைமுனு (3) 1ம் அக்போ (4) 1ம் விஜயபாகு

04. இலங்கை வரலாற்றில் முதன் முதலில் கிராமங்களுக்கு எல்லை வகுத்தவன்.

(1) பண்டுகாபயன் (2) வசபன் (3) மகாசேனன் (4) துட்டகைமுனு

05. பெரிய நகரக் குடியயேற்றங்களை குறிப்பிடுவதற்கு பயன்படுத்திய சொல்.

(1) கரம் (2) புரம் (3) தரம் (4) நிறம்

06. இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள்.

(1) ஆறு (2) எட்டு (3) இரண்டு (4) ஐந்து

07. 2ம் இராஜசிங்கன் காலத்தில் கண்டியில் கைதியாக இருந்து இலங்கை பற்றிய நூலை வெளியிட்ட ஆங்கிலேயன்.

(1) ஜோன் பைபஸ் (2) ரொபட் நொக்ஸ்
(3) ரொபட் பிரவுன்றிக் (4) ஜோன் டொய்லி

08. இலங்கையில் முதலில் குடியேறிய மனித இனம்.

(1) ஹோமோ இரெக்டஸ் (2) ஹோமோ நியண்டதால்
(3) ஒஸ்ரரோ பிதகஸ் (4) ஹோமோ செபியன்ஸ்

09. கற்கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகை.

(1) பாகியன்கல (2) மினிஹாகல்கந்த (3) புந்தல (4) அலிகல

10. நிரல் I ஐ நிரல் II உடன் தொடர்பு படுத்தினால் வரும் சரியான ஒழுங்கு.

| | |
|---|---|
| பாகியன் தேரர் | A பிரித்தானியா |
| இப்னு பதூதா | B சீனா |
| ஜோவாவோ ரிபைரோ | C அரேபியா |
| ரொபட் நொக்ஸ் | D போர்த்துக்கல் |

(1) BCDA (2) ABCD (3) ADBC (4) BCAD



kalvi.lk

11. இல்லத் தலைவர்கள் அழைக்கப்பட்ட பெயர்.

(1) கமிக (2) கிராமிக (3) பருமக (4) குருஹபதி

12. சோழர்களை இலங்கையிலிருந்து விரட்டிய பொலன்னறுவை ஆட்சியாளன்.

(1) 1ம் விஜயபாகு (2) 2ம் நிஸ்ஸங்கமல்லன்

(3) 2ம் பராக்கிரமபாகு (4) 1ம் பராக்கிரமபாகு

13. பாகியன்கல குகை அமைந்துள்ள இடம்.

(1) மறிச்சுக்கட்டி (2) புளத் சிங்கள (3) கற்பிட்டி (4) மாகம

14. இரண்டாக பிளந்த நிலையில் மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

(1) பாகியன்கல (2) குருவிட்ட பட்டதொம்பலன

(3) இராவண எல்ல (4) பெல்லன்பதிபலன்ஸ

15. உலர்வலய மக்கள் குளத் தொகுதியை அழைத்த பெயர்.

(1) வெவ பிரபாதனய (2) வெவகம (3) எல்லங்காவ (4) வாபிகாம

16. தந்தையிடமிருந்து மகனுக்கு ஆட்சி வழங்கியமைக்கு உதாரணம்.

(1) காவன் தீசன் - பண்டுகாபயன் (2) வசபன் - வங்கநாஸிகன்

(3) தேவநம்பிய தீசன் - உத்திய (4) துட்டகைமுனு - சத்தாதீஸன்

17. நிரல் I ஐ நிரல் II உடன் தொடர்புபடுத்தினால் வரும் சரியான ஒழுங்கு

| | |
|---|---|
| I) படகரிக | A) அமைச்சர் |
| II) மஹாமத | B) தலைமை அமைச்சர் |
| III) நகரகுத்திக | C) பொருளாளர் |
| IV) அமெத | D) நகர பரிபாலகர் |

(1) CBDA (2) ABCD (3) DBCA (4) CBAD

பின்வரும் அட்டவணையை வைத்து 18, 19ம் வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A மினிஹாகல்கந்த | D பட்டதொம்பலன | G பத்திராஜவல |
| B பாகியன்கல | E புந்தல | H கித்துல்கல பெலிலன |
| C பண்டாரவள | F அலிகல | I பொத்தான |

18. கரையோர வெட்டவெளிகளை உள்ளடக்கிய விடை.

(1) ADG (2) AEI (3) BEG (4) AEG

19. ஈரவலய குகைகளை உள்ளடக்கிய விடைத் தொகுதி.

(1) BDH (2) AEI (3) BEG (4) AEG

20. மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமம்.

(1) வட்டகீ காம (2) பட்டாண காம (3) ஒலகம் (4) நியம்கம்

(20X2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

| தரம் 10 | வலயக்கல்விக் காரியாலயம் – கட்டுகஸ்தோட்டை<br>முதலாந்தவணைப் பரீட்சை – 2020<br>வரலாறு – II | புள்ளிகள் |
|---|---|---|

சுட்டெண் :

- ❖ பகுதி I இன் 1ம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II ல் மூன்று வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக 4 வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01 (அ) பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறித்துக் காட்டுக.
**மாந்தை துறைமுகம், பராக்கிரம சமுத்திரம், கல் ஓயா, காலி, தேவநகர, மட்டக்களப்பு, மல்வத்து ஓயா, கொழும்பு, கொடவாய, இரணைமடுக்குளம், பாகியன்கல, பொல்கொல்ல அணை.**

(12 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் இடங்களை உலகப்படத்தில் குறித்துக் காட்டுக.
**பாக்கு நீரிணை, சுமாத்ரா தீவு, போர்த்துக்கல், செங்கடல், நன்னம்பிக்கை முனை, பாரசீகக் குடா.**

(6 புள்ளிகள்)

(இ) படம் A



I) படத்தில் காட்டப்படும் நபர் யார்?
II) இவரது நாடு எது?
III) இவர் எந்த இனத்தை சேர்ந்தவர்?
IV) இவர் உலகப்படத்தில் இலங்கைக்கு வைத்த பெயர்?

(4 புள்ளிகள்)

படம் B



I) படத்தில் காட்டப்படும் உரு எது?
II) இதனை நிர்மானித்த மன்னன் யார்?
III) இம் மன்னன் எந்த வம்சத்தை சேர்ந்தவர்?
IV) இது எங்கு காணப்படுகின்றது?

(4 புள்ளிகள்)

(ஈ) I) இலங்கையின் புராதன கல்வெட்டுக்கள் எவ் எழுத்துக்களால் எழுதப்பட்டது.?
II) அரிஸ்டோட்டில் இலங்கை பற்றி எழுதிய நூலின் பெயர் என்ன?
III) மகாநாம தேரர் வசித்த இடம் எது?
IV) வல்லிபுரம் பொற்சாசனத்தில் குறிப்பிடப்பட்ட யாழ்ப்பாண அமைச்சர் யார்?

(4 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

02 I) மூலாதாரங்களின் இரண்டு வகைகளும் எவை? (2 புள்ளிகள்)

II) தூது காவியங்கள் மூன்றையும் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

III) வரலாற்றைக் கற்பதன் பயன்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

03 I) இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய - விடயங்கள் 4 தருக? (2 புள்ளிகள்)

II) கல்வெட்டுக்களின் வகைகளில் 4 ஐக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III) இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள் இரண்டையும் தொல்பொருள் - மூலாதாரங்களின் பயன்கள் இரண்டையும் தருக. (4 புள்ளிகள்)

04 I) பின்வரும் கால கட்டங்களின் வேறு பெயர்களை தருக?

அ. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் -

ஆ. முன் வரலாற்றுக் காலம் - (2 புள்ளிகள்)

II) பின்வரும் ஒவ்வொன்றிற்கும் உதாரணம் ஒன்று தருக?

அ. கரையோர வெட்டவெளி -

ஆ. தாழ்நில உலர்வலயக் குகை -

இ. மலையக வெட்டவெளி -

(பண்டாரவளை, பாகியன்கல, அலிகல, பத்திராஜவல) (3 புள்ளிகள்)

III) முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

05 I) பண்டைய குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 4 தருக.

அ. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் -

ஆ. முன் வரலாற்றுக் காலம் - (2 புள்ளிகள்)

II) வரலாற்றுக்கால பின்வரும் கிராமங்களின் பெயர்களை தருக?

அ. விவசாயிகள் வாழும் கிராமம் -

ஆ. இடையர் வாழும் கிராமம்

இ. துறைமுகத்தை கொண்ட கிராமம்.

ஈ. மீனவர் வாழும் கிராமம்

(கோபாலகாம, கேவட்டகாம, கசீகாரகாம, பட்டாணகாம, கும்பகாரகாம) (4 புள்ளிகள்)

III) தொல்பொருள் மூலாதாரங்கள் வேகமாக அழிவதற்கான காரணங்கள் இரண்டையும் அதனைப் பாதுகாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் இரண்டையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

06 I) துட்டகைமுனுவின் தளபதிகள் நான்கு பேரை குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

II) கமிகவின் பணிகள் 3 ஐக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

III) பண்டைய இலங்கையில் அரசுரிமை வழங்கப்பட்ட முறைகளை உதாரணங்களுடன் தருக? (5 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page